**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.</u>**

**<u>(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**சி.சி.எண்: 86/2015**

**அ.சா : 1 கிருஷ்ணமூர்த்தி**

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள்.16.04.2024.**

**1,5 எதிரிகள் ஆஜர். 2,3 எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**<u>2,3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் மாட்டு வியபாரம் மற்றும் விவசாயம் செய்து வருகிறேன். என்னுடன் சேர்ந்து முனியப்பன் என்பவரும் மாட்டு வியபாரம் செய்து வந்தார். 1வது எதிரியின் தகப்பனார் பெயர் முனியப்பன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. முனியப்பனும் நானும் கூட்டாக பணம் போட்டு வியபாரம் செய்வோம் என்றால் நான் தான் பணம் போட்டு வியபாரம் செய்வேன். வியபார பணம் நான் முனியப்பனுக்கு கொடுக்கவேண்டும் என்றும் அது தான் பிரச்சனை என்றும் சொன்னால் சரியல்ல. காயம்பட்டு நான் மத்தூர் மருத்துவமணைக்கு சிகிச்சைக்காக செல்லவில்லை. புகார் நான் எதுவும் கொடுக்கவில்லை.

போலீசார் சம்பவ தினத்தன்று இரவு மருத்துவமணையில் வைத்து என்னை விசாரணை செய்தார்கள். மருத்துவமணைக்கு எப்போது சென்றேன் என்று நினைவில் இல்லை. வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை நான் தான் சொன்னேன். ஆனால் பெயர், ஊர் எதுவும்  தெரியாது என்று சொன்னேன். அதன் பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை. புகாரில் கையெழுத்து எதுவும் செய்யவில்லை. புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. புகாரில் முதல் விசாரணையில் சொன்ன விவரங்களை கூறினேனா என்றால் என்னை அடித்த விவரங்களை கூறினேன்.

சாட்சியம் அளித்தவர்கள் எனது உறவினர்கள் கிடையாது. அனைவரும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் ஆகும். எனது வீட்டை சுற்றி கோவிந்தன், ராமன், செல்வம், ஆகியோர்கள் வீடு உள்ளதா என்றால் அவர்களது வீடு தள்ளி உள்ளது. சாட்சியம் அளித்தவர்களின் வீடு அவர்கள் வீட்டை தாண்டிதான் உள்ளது. நான் சொல்வது

போல் சம்பவம் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் முனியப்பனுக்கு பணம் கொடுக்கவேண்டும் என்றும், அதற்காக பொய் புகார் கொடுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

(5 வது எதிரி தரப்பில் 2,3 எதிரிகள் தரப்பில் செய்த குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது. )

(1 வது எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இல்லை. போதிய வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யாத காரணத்தால் குறுக்கு விசாரணை வாய்ப்பு முடித்து வைக்கப்படுகிறது.)

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

ஓம்/– எஸ். வி. சண்முகநாதன், பி.காம்., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.

**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.</u>**

**<u>(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**சி.சி.எண்: 86/2015**

**அ.சா : 2 சீனா**

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள்.16.04.2024.**

**1,5 எதிரிகள் ஆஜர். 2,3 எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**<u>2,3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனக்கு வேறு எதுவும் பெயர் கிடையாது. போலீசார் விசாரிக்கும் போது சீனா என்று தான் பெயரை தான் சொன்னேன். அ.சா.1 எனக்கு சித்தப்பா முறை ஆகும். அ.சா.1 ன் வீடு எனது வீட்டில் இருந்து 1/4 கி.மீ தூரத்தில் இருக்கும். பார்த்தால் தெரியும். நான் சம்பவத்தை நேரடியாக பார்த்தேன். சம்பவத்தை எனது வீட்டில் இருந்து பார்த்தேன். கிருஷ்ணமூர்த்தி வீட்டை சுற்றி ராமன், கோவிந்தன், செல்வம் ஆகியோர்கள் வீடும், நடுவில் சாலையும், முருகன் கோவில் ஆகியவை உள்ளது. நான் சென்று சம்பவத்தை பார்த்ததாகவும், தடுத்ததகாவும், போலீசார் விசாரணையில் கூறியுள்ளேன். போலீசார் என்னை இரவு 07.00 மணிக்கு வந்து விசாரித்தார்கள்.

அ.சா.1 கிருஷ்ணமூர்த்தி அப்போது அங்கு இருந்தார். அங்கு கமலா, மங்கை ஆகியோர்கள் இருந்தார்கள். மருத்துவமனைக்கு அ.சா.1 யை யார் அழைத்து சென்றார்கள் என்று எனக்கு தெரியாது. அ.சா.1 எனது சித்தப்பா என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றும், நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றும், எனது வீட்டில் இருந்து சம்பவத்தை பார்க்க இயலாது என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் போலீசார் விசாரணை செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம்இல்லை என்று சொன்னால் சரியல்ல.

(5 வது எதிரி தரப்பில் 2,3 எதிரிகள் தரப்பில் செய்த குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது. )

(1 வது எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இல்லை. போதிய வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யாத காரணத்தால் குறுக்கு விசாரணை வாய்ப்பு முடித்து வைக்கப்படுகிறது.)

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

ஓம்/– எஸ். வி. சண்முகநாதன், பி.காம்., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.

**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.</u>**

**<u>(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**சி.சி.எண்: 86/2015**

**அ.சா : 3 கமலா**

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள்.16.04.2024.**

**1,5 எதிரிகள் ஆஜர். 2,3 எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**<u>2,3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அ.சா.1 கிருஷ்ணமூர்த்தி எனக்கு சித்தப்பா ஆவார். எனது வீடு அ.சா.1 ன் வீட்டில் இருந்து 1/2 கி.மீ தூரத்தில் இருக்கும். சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. ஏற்கனவே சாட்சியம் அளித்தது போலீசார் கூறியதன் பேரில் அளித்தேன்.

(5 வது எதிரி தரப்பில் 2,3 எதிரிகள் தரப்பில் செய்த குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது. )

(1 வது எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இல்லை. போதிய வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யாத காரணத்தால் குறுக்கு விசாரணை வாய்ப்பு முடித்து வைக்கப்படுகிறது.)

**<u>அரசு தரப்பில் மறு விசாரணை</u>**

நான் ஏற்கனவே நீதிமன்றத்தில் முதல் விசாரணை சாட்சியம் அளித்துள்ளேன். எதிரிகள் அ.சா.1யை கல் மற்றும் தேங்காய் மட்டை, செருப்பு ஆகியவற்றால் அடித்தார்கள் என்றும் அதை நான் தடுத்து சண்டையை விலக்கிவிட்டேன் என்று முதல் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

ஓம்/- எஸ். வி. சண்முகநாதன், பி.காம்., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.

**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.</u>**

**<u>(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**சி.சி.எண்: 86/2015**

**அ.சா : 5 மங்கை**

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள்.16.04.2024.**

**1,5 எதிரிகள் ஆஜர். 2,3 எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**<u>2,3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அ.சா.1 கிருஷ்ணமூர்த்தி எனக்கு மச்சினர் ஆவார். அ.சா.1ன் வீடு எனது வீட்டில் இருந்து 3 வீடு தள்ளி உள்ளது. சம்பவம் நடைபெறும்போது எனது வீட்டின் அருகே நானும், எனது கணவர் சென்னமூர்த்தி, எனது மகள் ஆகியோர் இருந்தோம். என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. சந்தைக்கு போய் விட்டு திரும்ப வந்த போது பிரச்சனை என்று சொன்னார்கள். சம்பவம் சத்தம் கேட்டுதான் அங்கு சென்றோம். அங்கே யாரும் இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(5 வது எதிரி தரப்பில் 2,3 எதிரிகள் தரப்பில் செய்த குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது. )

(1 வது எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இல்லை. போதிய வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யாத காரணத்தால் குறுக்கு விசாரணை வாய்ப்பு முடித்து வைக்கப்படுகிறது.)

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென ஒப்புக்கொண்டார்.

ஓம்/- எஸ். வி. சண்முகநாதன், பி.காம்., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.

**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.</u>**

**<u>(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**சி.சி.எண்: 86/2015**

**அ.சா : 6 முனியம்மாள்**

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள்.16.04.2024.**

**1,5 எதிரிகள் ஆஜர். 2,3 எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**<u>2,3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அ.சா.1 எனது கணவர். சம்பவம் நடக்கும்போது நான் கூலி வேலைக்கு சென்றுவிட்டேன். எனக்கு என்ன நடந்தது யார் அடித்தார்கள் போன்ற விவரம் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. வழக்கு பற்றி தெரியாது.

(5 வது எதிரி தரப்பில் 2,3 எதிரிகள் தரப்பில் செய்த குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது. )

(1 வது எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இல்லை. போதிய வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யாத காரணத்தால் குறுக்கு விசாரணை வாய்ப்பு முடித்து வைக்கப்படுகிறது.)

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

ஒம்/– எஸ். வி. சண்முகநாதன், பி.காம்., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.

**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.</u>**

**<u>(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**சி.சி.எண்: 86/2015**

**அ.சா : 7 அபிமன்னன்**

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள்.16.04.2024.**

**1,5 எதிரிகள் ஆஜர். 2,3 எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**<u>2,3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அ.சா.1 கிருஷ்ணமூர்த்தி எனக்கு மாமா முறை ஆகும். நான் பாரதிபுரத்தில் குடியிருந்து வருகிறேன். எனது வீடும், எனது மாமா வீடும் 100 அடிக்குள் உள்ளது. சம்பவம் நடைபெறும்போது நான் சம்பவ இடத்தில் இல்லை. நான் வரும்போது அங்கு யாரும் இல்லை. சம்பவம் எனக்கு போலீசார் சொல்லி தான் தெரியும். போலீசார் படம் வரைந்து தேங்காய்மட்டை, கல், செருப்பு ஆகியவற்றை கைப்பற்றினார்கள். சம்பவ தினத்தன்று மாலை 06.00 மணியளவில் போலீசார் அழைத்தார்கள் சென்றேன். அந்த பொருட்களை போலீசார் எடுத்து காட்டினார்களா என்றால் அங்கு இருந்தது போலீசார் எடுத்தார்கள்.

போலீசார் கையெழுத்து பெற்ற பேப்பரை படித்து காட்டினார்கள் அதில் உள்ள விவரங்களை நான் சொல்லவில்லை. போலீசார் தான் எழுதினார்கள். பொருட்களை நான் கைப்பற்றி கொடுக்கவில்லை. போலீசார் அன்று விசாரித்ததற்கு பிறகு வேறு எப்போதும் விசாரிக்கவில்லை. போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் கையெழுத்து செய்தேன். போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(5 வது எதிரி தரப்பில் 2,3 எதிரிகள் தரப்பில் செய்த குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது. )

(1 வது எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இல்லை. போதிய வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யாத காரணத்தால் குறுக்கு விசாரணை வாய்ப்பு முடித்து வைக்கப்படுகிறது.)

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

ஓம்/– எஸ். வி. சண்முகநாதன், பி.காம்., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.